குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 112/2020

அ.சா. 2

2024–ம் ஆண்டு செப்டம்பர் 02–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னதம்பி | ஜாதி | |
| தந்தை பெயர் | குள்ளான் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.35 மணி,

Accused Gnanasekaran present. Advocate Mr.Prakasam present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் பொம்மியம்பட்டியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மேச்சேரி செல்லும் சாலையில் நான் சென்று கொண்டு இருந்த போது சிந்தாமணியூர் தாண்டி சௌத்திந்தியன் பள்ளி அருகே போலீசார் படம் எடுத்து விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். நான் அருகில் சென்று பார்த்தேன். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 1வது கையெழுத்து அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் குமார் என்பவர் கையெழுத்து போட்டார். விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரிப்பதாக சொன்னார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. அ.சா.1 எனது உறவினர் அல்ல. நான் பொம்மியம்பட்டியில் வசிக்கிறேன். அ.சா.1 பாரப்பட்டியில் வசிக்கிறார். நான் சம்பவ இடத்திற்கு சென்ற தேதி மாதம் வருடம் தெரியவில்லை. நான் காலையில் சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில்

சென்றேன். நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியாது. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டும் உரிமம் இல்லை என்றால் சரி. நான் சிந்தாமணியூர் பேருந்து நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் யார் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் அதில் உள்ள விபரம் பற்றியும் எனக்கு தெரியாது.

3. சிந்தாமணியூர் பேருந்து நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கிய போது சுமார் 10-20 நபர்கள் இருந்தார்கள். மேற்படி 20 நபரிகளிடம் போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. அ.சா.1 எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 03.43 மணி,

ஒம்/-ச.ஷர்மிளா.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.